அசல் வழக்கு எண். 22/2020 தேத 04-03-2024

வா.சா.1– வடிவேல்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது இடத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதை பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி சர்வே எண்.706/9 மற்றும் 706/10 ல் 57 சதுர அடி அக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி ஆக்கிரமிப்பு செய்துள்ளதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அசல் வழக்கு எண்.228/2017 ல் நீதிமன்ற ஆணையர் சொத்துககளை அளந்து தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் விசாரணை நடைபெறவில்லை என்றால் பிரதிவாதி தாக்கல் செய்த மேற்படி வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை. அசல் வழக்கு எண்.228/2017 வழக்கை மேற்கொண்டு நடத்த பிரதிவாதி நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களுடன் சர்வேயர் வரைபடம் தாக்கல் செய்யாத காரணத்தால் அதன் அடிப்படையில் எவ்வித பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.228/2017 ல் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்ட போது வாதிக்கு எவ்வித அழைப்பாணையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரை விசாரித்தால் மேற்படி விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

2. பத்தி 2 ல் மனு சொத்தை அளவை செய்ய சர்வே கல் முதலில் கிடைக்கவில்லை என்றும், பழைய கட்டிட அளவுகளை வைத்து தான் அளக்க முடியும் என குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரிதான். சர்வே கல் பின்னர் கண்டுபிடித்துவிட்டனர். சர்வே கல் பின்னர் கண்டுபிடித்து அளந்ததாக வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.5 ஆணையர் அறிக்கையில் கீழ்புறத்தில் ஆக்கிரமிப்பு இருந்ததாகவும், அதன் பின்னர் மேல்புறத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதாகவும் முரண்பட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சர்வே கல் மூலமாக சொத்தை அளந்தால் அளவுகள் சரியாக இருக்கும் என்றால் சரிதான். எந்த சர்வே கல்லையும் வைத்து சொத்தை அளவீடு செய்யாததால் வா.சா.ஆ-5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் செல்லக்கூடியது அல்ல என்றால்சரியல்ல. அசல் வழக்கு எண்.228/2017 ல்

ஆக்கிரமிப்பு உள்ளதாக எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்யாமல் தாவா வழக்கு புதிதாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் பட்டா எண்.1040 அந்தோணி பெயரில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண்.132 இருதயம் பெயரில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி பட்டா எண்.1040 மற்றும் 132 ஆகியவற்றின் அடிப்படையில் சொத்தை கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் மேற்படி பட்டாக்களை இணைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பாட்டாக்களும் மனைவாரி தோராய பட்டா என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற மேற்படி நபர்களுக்கு தனிப்பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தோராய பட்டாவின் மூலம் சொத்தின் உரிமையை நிலைநாட்ட முடியாது என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு மேற்படி சொத்தை பொருத்து உரிமை ஏற்படவில்லை என்பதால் அவரிகளிடம் இருந்து நான் பெற்ற கிரையம் செல்லக்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

4. பட்டா எண்.1040 என்பது அந்தோணிசாமி மகன் டார்வின் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதன் சர்வே எண்.271/12 என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை பன்னப்பட்டி கிராமம் சர்வே எண்.271/12 ல் உள்ள சொத்திற்கு டார்வின் பெயரில் பட்டா எண்.1040 உள்ளது என்றால் சரியல்ல. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் இது குறித்து தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியான தகவல் இல்லை. பட்டா எண்.1040 இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண். 1040 வழக்கிற்காக மோசடியாக நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா எண்.132 ன் படி நான் கிரையம் பெற்றுள்ள நிலையில் அதே பட்டா எண்.132 ல் என் பெயரில் பட்டா மாற்றம் செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பட்டா எண் 1040 மற்றும் 132 ஆகியவை உண்மையானவை இல்லை என்றும், என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு தாவா சொத்தை நான் கிரையம் கொடுத்தற்காக கிரைய பத்திரம் என்றால் சரிதான்.

5. 20.11.2021ம் தேதிய கிரைய பத்திரம் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். தாவா சொத்திற்கான வில்லங்க சான்று பதிவு நகல் **பி.வா.சா.ஆ.2.** தாவா சொத்திற்கு கோபாலகிருஷ்ணன் பெயரில் உள்ள பட்டா எண்.1538 கணினி நகல் **பி.வா.சா.ஆ.3**. தாவா சொத்துக்களை நான் கோபாலகிருஷ்ணனுக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்களை பொருத்து தாவா வழக்கை மேல்நடத்த எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.  வா.சா.ஆ. 1கிரைய பத்திரத்தில் ராமலிங்கம் வீட்டின் அத்திற்கு கிழக்கே தான் நான்குமால் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. தாவா சொத்துக்களை நான் கிரையம் பெறுவதற்கு முன்னதாகவே பிரதிவாதி அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஏற்கனவே வீடு கட்டியிருந்ததால் தான் வா.சா.ஆ-1 ஆவணத்தில் நான்கு எல்லை விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே வீட்டு வேலை ஆரம்பித்திருந்தார். புதிதாக வீடு கட்டியதாகவும், அதனை நான் தடுத்ததாகவும், பொய்யாக வழக்கு மூலம் ஏற்படுத்த கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித உரிமையும் எனக்கு இல்லை என்பதால் வழக்கை மேல்நடத்தவும், சாட்சியம் அளிக்கவும் எனக்கு தகுதி இல்லை என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தூய்மையான கரங்களுடன் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**